1978 மார்ச் 20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கல்வி மானியத்தின் மீது பேசிக் கொண்டு இருப்பது போல் கேள்விகள் போய்க் கொண்டு இருக்கின்றன என்பதை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திருச்சி மண்டல பொறியியற் கல்லூரியில் மாலை நேர வகுப்புகள்.

*628 வினு—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மண்டல பொறியியற் கல்லூரி (Regional Engineering College)யில் 30 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ளவர்கள் மட்டும் மாலை நேர வகுப்பு (B.E.) க்கு சேர்க்க வேண்டும் என்ற விதி இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அந்த விதியை மீறியவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பொதுவாக திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரியிலிருந்து 30 கிலோ மீட்டருக்கு அப்பால் வேலை செய்பவர்களை அக்கல்லூரி மாலை நேர வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இவ்விதி, மாலை நேர வகுப்பில் சேருவதற்கு வேண்டிய தகுதிகளில் (Qualification for admission) ஒன்ருக சேர்க்கப்படவில்லையாலுைம், இப் படிப்புக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கான அறிவிப்பில் (Information and Instruction to Candidates) பொதுச் செய்தியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) இதுவரையில் 30 கிலோ மீட்டருக்கு அதிகமான சுற்றளவில் வேலை பார்க்கும் எவரும், திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரியில் நடத்தப்படும் பொறியியல் மாலை நேர வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(முற்பகல் 9-20)

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, அந்த கல்லூரியினுடைய ரூல்ஸைப் பொறுத்தமட்டில், பார்ட் டைம் பி.இ. கோர்ஸ் 30 கிலோ மீட்டர் தூரத்திற்குள் தங்கக் கூடியவர், 3 ஆண்டு காலம் அனுபவம் உள்ளவர், தற்போது வேலையில் இருக்கிறவர் என்ற இந்த மூன்று கண்டிஷன்களிலும் தகுதி படைத்தவர்களை அட்மிட் செய்வது என்று பொதுவான விதி இருக்கிறது. இந்த விதியை மீறிய ஒரு கேஸ்கூட இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னுர்கள். பல கேஸ்கள் இருக்கின்றன என்பதற்கு உதாரணமாக ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன்.

[1978 மார்ச் 20

30 கிலோ மீட்டர் அல்ல, இந்த மாநிலம் அல்ல, தென் மாநிலம் கூட அல்ல, வடக்கே இருந்து ஒருவர் பார்ட் டைம் பி.இ. கோர்ஸுக்கு அட்மிட் செய்யப்பட்டு, அவருக்கு வீடும் இல்லாமல், ஆஸ்டலிலேயே இடம் கொடுக்கப்பட்டு, மத்திய அரசில் யாரோ செல்வாக்கு பெற்ற ஒருவரின் சிபாரிசின் பேரில் அட்மிட் செய்து, கல்லூரி ரூல்ஸை வயலேட் செய்திருக்கிருர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன காரணம்? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. இருந்தாலும் அதுபற்றி விசாரிக்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, எஞ்சினீயரிங் கல்லூரிகளில் காரைக்குடி, திருச்சி, சேலம் போன்ற இடங்களில் 30 மாணவர்கள் என்ருல் சென்னையில் 45 மாணவர்கள் வரை சேர்த்திருக்கிருர்கள். அந்த உத்தரவில் 30 கிலோ மீட்டர் தூரத்திற்குள் வேலை செய்கின்ற டிப்ளமா ஹோல்டர்ஸ் மட்டும் தான் சேரலாம் என்றிருக்கிறது. அதை மாற்றி எல்லா இடங்களிலிருந்தும் அட்மிஷன் கேட்பவர்களுடைய மனுக்களைப் பரிசீலித்து, அவர்களை கல்லூரியில் சேர்த்துவிட்டு, சேர்க்கப்பட்டவர்களுக்கு 30 கிலோ மீட்டர் தூரத்திற்குள் வேலை கொடுத்தால் இந்த நாட்டிலே இருக்கிற டிப்ளமா ஹோல்டர்ஸ் அனைவரும் இஞ்சினீயராக மாறும் வாய்ப்பு ஏற்படும். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த தூரம் போன்ற நிபந்தனைகள் எல்லாம் அவர்கள் செய்கின்ற வேலைக்குப் பாதகம் ஏற்படாமல் படிக்கின்ற படிப்புக்கும் குந்தகம் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே, அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஒ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, சிவகங்கையிலும் அதைச் சுற்றிலும் 400-க்கு மேற்பட்ட டிப்ளமா எஞ்சினீயர்கள் இருக்கிருர்கள். அவர்கள் காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரியில் மாலை நேர படிப்பு படிக்க அனுமதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அப்படி கோரிக்கை வந்தால் அரசு பரிசீலிக்கும்.